## அதிகாரம் 13

# ஆபிரகாமும்-லோத்தும் பிரிதல்

ஆபிரகாம் எகிப்திற்கு சென்ற போதே அவன் ஒரு செல்வ சீமானாயிருந்தான் (12:5). ஏமாற்று செயல்கள் அவனிடம் இருந்த போதிலும், கர்த்தர் அதனுடன் பார்வோனுடைய அமோகமான வெகுமதிகளாலும் அவனை ஆசீர்வதித்தார் (12:16; 24:35). இதைத் தவிர, ஆபிரகாமும் சாராளும் எகிப்தை விட்டு வெளியேறி மறுபடியும் அவர்களது பயணத்தைத் தொடங்கும்படி வலியுறுத்தப் பட்டார்கள்.

எந்த நிகழ்வுகளும் சான்றாக நடைபெறாமல், அவர்களது பயணம் கானானுக்கு திரும்பும்படியானதாக இருந்தது. நிர்ப்பந்தத்திற்குள்ளானார்கள். அவர்களுக்கு அந்த பூமியின் எல்லை வரை, ஒரு அரசாங்கத் துறை சார்ந்த மெய்க்காவலர் இருந்திருக்க வேண்டும். வாக்குத்தத்த பூமியை விட்டு அவர்கள் துரத்தி அடித்த பஞ்சத்தைப் பற்றி நாம் எதையும் படித்து தெரிந்து கொள்ள முடியவில்லை.

எகிப்தை விட்டு இடம் பெயர்ந்த பின், ஆபிரகாம் மற்றும் சாராளுடைய உறவு முறையைப்பற்றி ஆச்சரியப்படுவதைத் தவிர நாம் ஒன்று செய்ய முடியாது. கோத்திரத் தலைவன் சுயநலமாய் சாராளை மறுதலித்து பார்வோனிடம் அவளை ஒப்படைத்த காரியத்திற்குப் பின், இன்னும் அவர்கள் ஒருவருக்கொருவர் நல்ல தொடர்பு வைத்திருந்தார்களா?

### ஆபிரகாம் கானானுக்குத் திரும்புதல் மற்றும் லோத்தோடு அவனுடைய போராட்டம் (13:1-7)

**1ஆபிராமும், அவன் மனைவியும், அவனுக்கு உண்டான யாவும், அவனுடனே லோத்தும், எகிப்தை விட்டு, தென்திசையில் வந்தார்கள்.
2ஆபிராம் மிருகஜீவன்களும் வெள்ளியும் பொன்னுமான ஆஸ்திகளை உடைய சீமானாயிருந்தான். 3அவன் தன் பிரயாணங்களிலே தெற்கேயிருந்து பெத்தேல் மட்டும், பெத்தேலுக்கும் ஆயீக்கும் நடுவாகத் தான் முன்பு கூடாரம்போட்டதும், 4தான் முதல்முதல் ஒரு பலிபீடத்தை உண்டாக்கினதுமான ஸ்தலமட்டும் போனான்; அங்கே ஆபிராம்**

**கர்த்தருடைய நாமத்தைத் தொழுதுகொண்டான். 5ஆபிராமுடனே வந்த லோத்துக்கும் ஆடுமாடுகளும் கூடாரங்களும் இருந்தன. 6அவர்கள் ஒருமித்துக் குடியிருக்க அந்தப் பூமி அவர்களைத் தாங்கக்கூடாதிருந்தது; அவர்களுடைய ஆஸ்தி மிகுதியா யிருந்தபடியால், அவர்கள் ஒருமித்து வாசம்பண்ண ஏது வில்லாமற்போயிற்று. 7ஆபிராமுடைய மந்தைமேய்ப்பருக்கும் லோத்துடைய மந்தை மேய்ப்பருக்கும் வாக்குவாதம் உண்டாயிற்று. அக்காலத்திலே கானானியரும் பெரிசியரும் அத்தேசத்தில் குடியிருந்தார்கள்.**

**வசனம் 1.** ஆபிரகாம் **எகிப்திலிருந்து** கானானிலுள்ள பெத்தேல் (Negev) என்ற இடத்திற்கு திரும்பியது குறித்து, ஆசிரியர் சிறிய விளக்கங்களுடன் பதிவு செய்துள்ளார் (ஆகிய விளக்கங்களை காண்க 12:10). **அவனுடைய மனைவியும்**, அவனுடைய பரிவாரங்களும் வந்தார் குறிப்பாக **லோத்து** தனித்து விடப்பட்டான். இதற்கு முன் எகிப்தில் லோத்தும் பரிவாரமும் மற்றும் ஏராளமும் இருந்தன என சொல்லப்படாவிடிலும், இங்கே அவன் ஆபிரகாமுடன் எகிப்திலிருந்து கானானில் உள்ள பெத்தேல் (Negev) என்ற இடம் வரை வந்து சேர்ந்தான் என வெளிப்படையான உரை மூலம் தெரிய வருகிறது. இதுவே, அந்த இரு மனிதரும் பிரிந்து செல்லுவதற்கான ஒரு சூழ்நிலையை உருவாக்கி விட்டது.

**வசனம் 2.** ஆபிரகாம் எகிப்திற்குள் செல்லும் முன்பே, ஒரு செல்வ சீமானாய் இருந்தான் (12:5). ஏமாற்றும் செயல்கள் அவனிடம் இருந்த போதிலும், கர்த்தர் பார்வோனுடைய அமோகமான வெகுமதிகளால் அவனை ஆசீர்வதித்திருந்தார் (12:16, 20). இந்த நேரத்தில், **ஆபிரகாம் மிருக ஜீவன்களால்** மாத்திரம் அல்ல, அதனுடன் **வெள்ளியும், பொன்னும் உடைய சீமானாயிருந்தான்** (காண்க 24:35).

**வசனங்கள் 3, 4.** கோத்திரத் தலைவன், தனது பயணத்தை **பெத்தேலில்** (Negev) இருந்து ஆரம்பித்து வடக்கு புறமாக நடுவே இருக்கும் மலை நாட்டிற்கு அதாவது அவன் ஏற்கனவே **பெத்தேலுக்கும் ஆயிக்கும் நடுவே கூடாரம் போட்டு**, அங்கே கர்த்தருக்கு ஒரு **பலி பீடம்** கட்டின இடம் வரைக்கும், அவனுடைய பரிவாரங்கள் அனைத்தும் அங்கு வந்து சேரும் வரை, அவனது காலடிகளை சென்ற வழியே திருப்பி வைத்தான். ஆபிரகாம், இதற்கு முன் கர்த்தருடன் கொண்டிருந்த அனுபவத்தை திரும்பப் பெற விருப்பம் உடையவனாய், எகிப்தில் கண்ட படுதோல்விக்குப் பின், இந்த இடத்திற்குத் திரும்பி வர தீர்மானித்திருக்கலாம் என தெரிய வருகிறது. **அங்கே கர்த்தருடைய நாமத்தைத் தொழுது கொண்டான்** (ஆகிய விளக்கங்களை காண்க 12:8). இந்த தொழுகை, ஏதாவது மனந்திரும்புதல் அல்லது கர்த்தரிடம் அவனுடைய எகிப்திலுள்ள பாவத்தன்மையை உணர்ந்து மன்னிப்புக் கோரியதாகவோ ஆசிரியர் தெரியப்படுத்தாவிடினும், அப்படி ஒரு அனுமானமானது, அநேகமாக உத்தரவாதத்துடன் இருக்கிறது.

அவ்வருடத்தில் உள்ள காலச் சூழ்நிலைக்கு ஏற்ப, ஆபிரகாம் திரும்பி அதே மத்திய மலை நாட்டுப் பகுதிக்கு வழிநடத்திச் செல்ல மற்றொரு காரணம் கூட இருந்திருக்கலாம். குளிர் கால, ஈரமான மாதங்களில் (அக்டோபர் முதல் மார்ச் வரை) மந்தைகளுக்குத் தேவையான புல்வெளிகள் சமவெளிகளில் இருந்திருக்க வேண்டும். வேனிற் கால வெப்பம் நிறைந்த மாதங்களில் (ஏப்ரல் முதல் செப்டம்பர் வரை) புல் வெளிகளும் மற்றும் நீரூற்றுகளும், நீரோடைகளும் உள்ள உயர்வான பகுதிகளை நோக்கி நகர்ந்திருக்க வேண்டும்.[1]

**வசனம் 5.** ஏராளமான உலகப் பிரகாரமான ஆசீர்வாதங்களை அனுபவித்துக் கொண்டிருந்தது ஆபிரகாம் மட்டும் அல்ல அவனுடன் பயணித்த **லோத்தும்** மந்தைகளும், கால்நடைகளும் உள்ளடக்கிய நிறைய ஆஸ்திகளைக் கொண்ட ஆசீர்வாதங்களை உடையவனாய் இருந்தான். அதனுடன், நிறைய **கூடாரங்கள்** போடப்பட்டன என்பதைப் பார்க்கும் பொழுது, அவனுடன் நிறைய வேலையாட்களும், வேலைக்காரிகளும் பயணித்திருக்க வேண்டும் என்பதற்கான ஒரு நிச்சயமான அபிப்பிராயத்தைத் தருகிறது (12:16 பார்க்க; ஆபிரகாம் செய்ததைப் போல). மேய்ப்பர்களில் அநேகர் அநேகமாக குடும்பங்களையும் உடையவர்களாக இருந்திருப் பார்கள் (காண்க 14:16). ஆகவே, ஆசிரியர் குறிப்பிட்டுள்ளது போல், அவர்கள் இருவருக்கும் சேர்த்து மொத்தமாக நிறைய செல்வம் இருந்துள்ளதால், ஆபிரகாமும், லோத்தும் இணைந்து தொடர்ந்து பயணம் செய்வது கூடாத காரியம் என்பதற்கு சான்றாக உள்ளது.

**வசனம் 6. அவர்கள் ஒருமித்துக் குடியிருக்க அந்த பூமி அவர்களைத் தாங்கக் கூடாதிருந்தது; அவர்களுடைய ஆஸ்தி மிகுதியாயிருந்தபடியால்**, அவர்கள் ஒருமித்து வாசம்பண்ண ஏதுவில்லாமற் போயிற்று. ஏனென்றால், அவர்களுக்கு அதிக அளவிலான தண்ணீரும், ஏராளமான மேய்ச்சல் நிலங்களும் தேவைப்பட்டிருக்கும். பிறகு, யாக்கோபும், ஏசாவும் இதைப் போன்ற ஒரு சூழ்நிலைக்குள்ளானார்கள் (36:6, 7).

**வசனம் 7. கானானியர்களும் பெர்சியர்களும்** இந்த இடத்தில் **குடியிருந்தார்கள்** என்ற உண்மையை, இடையில் ஆசிரியர் கூறியுள்ளார். **ஆபிரகாமுடைய மந்தை மேய்ப்பர்களுக்கும் லோத்தினுடைய மந்தை மேய்ப்பர்களுக்கும்** இடையே உள்ள வாக்குவாதங்கள் தவிர்க்க முடியாததாக இருந்தாலும், அதைத் தவிர இந்த பரதேசிகளுக்கும் இந்த பூமியில் நிரந்தரமாக குடியிருந்தவர்களுக்கும் இடையேயும் வாக்குவாதங்கள் இருந்தன என்று தெரிகிறது. கானானில் ஏற்கனவே குடியிருந்தவர்களுக்கு, ஒரு திரள் கூட்டமான அந்நியர்கள் மந்தைகளுடனும் கால் நடைகளுடனும் தங்களுடைய பூமியில் நுழைவதைப் பார்த்து எச்சரிப்படைந்திருப்பார்கள் என்பதில் சந்தேகம் இல்லை. ஆபிரகாமின்

மந்தை மேய்ப்பர்களுக்கும், லோத்தினுடைய மந்தை மேய்ப்பர்களுக்கும் மற்றும் கானானியர்களுக்கும், பெர்சியர் களுக்கும் இடையே உள்ள இறுக்கம் அதிகரித்திருக்க வேண்டும்.[2] அந்த பூமியானது நிறைந்த புல்வெளிகள் கொண்டதாயும், அவர்களது அதிகப்படியான தேவைகளை சந்திக்கத்தக்கதாக ஆகாரம் மற்றும் மேய்ச்சல் நிலங்கள் கிணறுகள், நீரூற்றுகள் மூலம் தண்ணீர் எல்லாவற்றையும் ஏற்கனவே அங்கு குடியேறி யுள்ளவர்கள் தங்களுக்கென்று வைத்துள்ளார்கள்.

அதன் பின்னர், ஈசாக்குடைய மந்தை மேய்ப்பர்களுக்கும், அபிமலேக்கினுடைய மந்தை மேய்ப்பர்களுக்கும் சச்சரவு வந்தது (26:12-33). சச்சரவு என்பது பொதுவாக மந்தை மேய்ப்பர்களுக்குள் புல்வெளி நிலத்திற்காகவும், மற்றும் கால்நடைகளுக்குத் தேவையான தண்ணீருக்காகவும் நிச்சயமாக நடப்பது தான். ஆதியாகமம் 12ம் அதிகாரத்தில், கணவன், மனைவி இடையே உள்ள இறுக்கமும், மற்றும் இப்பொழுது பெரிய தகப்பனுடைய மந்தை மேய்ப்பர்களுக்கும், அவரது தம்பி மகனுடைய மந்தை மேய்ப்பர்களுக்கும் உள்ள வாக்குவாதங்களானது அவர்களது தனிப்பட்ட உறவு முறைக்கே குந்தகம் விளைவித்து, பயப்படத் தக்கதாக உள்ளது.

## ஆபிரகாமின் தாராளமான முன்மொழிதல் மற்றும் லோத்து முடிவெடுத்தல் (13:8-13)

**8ஆபிராம் லோத்தை நோக்கி: எனக்கும் உனக்கும், என்
மேய்ப்பருக்கும் உன் மேய்ப்பருக்கும் வாக்குவாதம் வேண்டாம்; நாம்
சகோதரர். 9இந்தத் தேசமெல்லாம் உனக்குமுன் இருக்கிறது அல்லவா?
நீ என்னைவிட்டுப் பிரிந்துபோகலாம்; நீ இடதுபுறம் போனால், நான்
வலதுபுறம் போகிறேன்; நீ வலதுபுறம் போனால், நான் இடதுபுறம்
போகிறேன் என்றான். 10அப்பொழுது லோத்து தன் கண்களை
ஏறெடுத்துப்பார்த்து: யோர்தான் நதிக்கு அருகான சமபூமி முழுவதும்
நீர்வளம் பொருந்தினதாயிருக்கக்கண்டான். கர்த்தர் சோதோமையும்
கொமோராவையும் அழிக்கும்முன்னே, சோவாருக்குப் போகும்
வழிமட்டும் அது கர்த்தருடைய தோட்டத்தைப்போலவும் எகிப்து
தேசத்தைப்போலவும் இருந்தது. 11அப்பொழுது லோத்து யோர்தானுக்கு
அருகான சமபூமி முழுவதையும் தெரிந்துகொண்டு, கிழக்கே
பிரயாணப்பட்டுப் போனான். இப்படி அவர்கள் ஒருவரை ஒருவர்
விட்டுப் பிரிந்தார்கள். 12ஆபிராம் கானான் தேசத்தில் குடியிருந்தான்;
லோத்து அந்த யோர்தானுக்கு அருகான சமபூமியிலுள்ள
பட்டணங்களில் வாசம்பண்ணி, சோதோமுக்கு நேரே கூடாரம்
போட்டான். 13சோதோமின் ஜனங்கள் பொல்லாதவர்களும் கர்த்தருக்கு
முன்பாக மகாபாவிகளுமாய் இருந்தார்கள்.**

**வசனம் 8.** ஆபிரகாம் தனித்து சமாதானத்துடன் நிலைமையை முடிவுக்கு கொண்டுவர உறுதியாயிருந்தான். ஒன்றுக்கொன்று எதிரான மக்கள் குழுக்கள் இருக்கும் இடத்தில் அவர்கள் சேர்ந்து குடியேறியிருப்பதால், அவன் லோத்துடன் இணக்கமான உறவு வைத்திருப்பதன் முக்கியத்துவத்தை உணர்ந்திருந்தான். இங்குள்ள எபிரெய பதமானது வழக்கத்துக்கு மாறானது. **நாங்கள் சகோதரர்கள்** என்று சொல்வதற்கு பதிலாக, “மனிதர்கள், சகோதரர்களாக, நாங்கள் இருக்கிறோம்,” “மனிதர்கள்” மற்றும் “சகோதரர்கள்” என ஒன்றை மற்றொன்றின் மேல் வைத்தாற்போல என்ற விதி முறைகளில் எழுத்தியல்பாக சொல்லுகிறது. “மனிதர்கள் சண்டை போடக்கூடாது, நாம் மட்டும் சகோதரர்கள்”[3] என்ற இந்த நடை இதைப் போன்று சிலவற்றை குறிப்பிடுகின்றன. “சகோதரர்கள்” என்ற பதம் (אַחִים, *’achim*, ஏச்சிம்), கண்டிப்பான அறிவுப்படி புரிந்து கொள்ள முடியாமல் இருந்த போதிலும், “சம்பந்தி” (ESV) அல்லது “உறவினர்கள்” (NLT) என புரிகிறது. லோத்து என்பவன் ஆபிரகாமின் தம்பியின் குமாரனாகவும், அதாவது கோத்திரத் தலைவனுடைய தம்பியாகிய ஆரானின் குமாரன் (11:27). சாதாரணமாக, முதியோர் ஒருவர், அவருடைய இளைய உறவினரை, இந்தச் சூழலில் சமாதானப்படுத்தி அவர்களுக்கிடையில் இருந்த எல்லா சச்சரவுகளையும் களைந்து விடும் விருப்பம் உடையவராய் இருந்தார்.

ஆபிரகாம் எகிப்திலே எவ்வாறு நடந்து கொண்டாரோ அதற்கு நேர் மாறாக, இந்த பயமுறுத்தும் சூழ்நிலையை சரி செய்ய, வேகமாக செயல்படுகிறார். நைல் நதிப்பள்ளத்தாக்கிலே, அவனுக்கு ஏற்கெனவே இம்மாதிரியான சச்சரவு ஏற்பட்டிருந்த காரணத் தினால், அது வன்முறையாக மாறுவதற்கு முன், இப்பொழுது இருக்கிற இறுக்கத்திற்கு வழி காண வேகமாக செயல்படுகிறார். எகிப்தில் அவன் சுய விருப்பத்தின்படி செயல் பட்டான் ஆனால் கானானுக்குத் திரும்பிய பின் ஒரு தயாள குணம் கொண்டவனாய், லோத்துக்கு ஆதரவாய், அவன் விரும்பிக் கொடுக்க ஏற்பாடு செய்கிறான். ஆபிரகாம் எகிப்தில் கண்ட படுதோல்வியின் மூலம், சில காரியங்களைக் கற்றுக் கொண்டதன் நிமித்தம், யாரும் உதவி செய்ய முன்வர மாட்டார்கள் என்ற போதும், அது ஆச்சரியமாய் உள்ளது; அவன் பெத்தேலுக்கு அருகில் பலிபீடத்திற்கு திரும்பியதாலும், மற்றும் அவன் கர்த்தருடன் தொடர்பு வைத்துக் கொண்டதின் நிமித்தம் (13:4), அவன் இந்த தீர்மானத்தை எடுக்கும் தாக்கத்தை ஏற்படுத்தியிருக்கக்கூடும்.

பிறகு, சச்சரவு இல்லாமல் சமாதானமாய் இருக்க வேண்டும் என்ற செய்தியை, ஆபிரகாம் தனது குமாரனாகிய ஈசாக்குக்கு எடுத்துச் சொல்ல விருப்பமுடையவனாய் இருந்ததைக் காணலாம். கேராரின் ராஜாவாகிய அபிமலேக்குவின் மந்தை மேய்ப்பர்களால் தூர்த்து மண்ணினால் நிரப்பிப் போடப்பட்ட தன்னுடைய துரவுகளுக்காக ஈசாக்கு

எதிர்த்து நிற்கவில்லை. ஈசாக்கு அவனது சட்டப் படியான உரிமைகளை அழுத்திக் கேட்டிருந்தால், அது வன்முறைக்கு வழி வகுக்கும் என்பதால், அதைத் தவிர்த்து ஈசாக்கு மறுபடியும் வேறொரு இடத்தில் துரவுகளைத் தோண்டுமாறு அவனுடைய வேலைக்காரருக்கு கட்டளையிட்டு, சமாதானமாய் செல்லும் வழியை தேர்வு செய்திருந்தான் (26:18-22).

**வசனம் 9.** ஆபிரகாமும், லோத்தும் அவர்களது குடும்பங்களுடனும் மற்றும் அவர்கள் சவதரித்திருந்த எல்லாவற்றுடனும் **தனித்தனி** வழிகளைத் தெரிந்து கொள்ள வேண்டும் என்ற ஒரு திட்டத்தை உண்டாக்கினான். அவன், கானானின் பூமியில் அவனுக்கு விருப்பமான இடத்தை தெரிந்து கொண்டு, அதில் குடியேறும்படியாக லோத்தை அனுமதித்தான். கோத்திரத் தலைவன், தனக்கென்று எதையும் எடுத்துக் கொள்ளாமல், லோத்தை நோக்கி **இந்த தேசமெல்லாம் உனக்கு முன் இருக்கிறது அல்லவா? நீ என்னை விட்டுப் பிரிந்து போகலாம்; நீ இடது புறம் போனால், நான் வலது புறம் போகிறேன்; நீ வலது புறம் போனால், நான் இடது புறம் போகிறேன் என்றான்.**

இந்த மாதிரியான வாக்கு, குறிப்பாக லோத்துவிற்கு நிச்சயமாக ஒரு எதிர்பாராத ஒன்றாக இருந்திருக்க வேண்டும் ஓர் ஆண் ஆதிக்க சமுதாயத்தில், வயதான முதியோர், தகப்பன் அல்லது மாமன் உறவு முறையில் உள்ளவருக்குத்தான் ஓர் தீர்மானம் எடுக்கும் உரிமையும் மற்றும் இளையவர்கள், அதை மதித்து அதற்கு கீழ்ப்படிய வேண்டும் என்ற வரைமுறை உள்ளது. இதனுடன், ஏற்கெனவே கர்த்தர் ஆபிரகாமுக்குத் தரிசனமாகி: உன் சந்ததிக்கு இந்த கானான் தேசத்தைக் கொடுப்பேன் என்று சொல்லியிருந்த கர்த்தருடைய ஒரு தீர்மானமாய் இருந்துள்ளது (12:7). கோத்திரத் தலைவன் எதிர்காலத் தேவைகளை ஈடு செய்ய, இயற்கையாகவும், விதிப்படியும் பார்த்தால், இந்த பூமியை அவனுக்காகவும், அவனுக்குப் பின் வரும் தலைமுறைக்கும் தேவையுள்ளது என அதைப் பாத்தியப்படுத்த வேண்டும் என்றல்லாது, லோத்துடைய சந்ததியார் சுதந்தரித்துக் கொள்ளுமாறு விட்டுக் கொடுத்து விட்டான்.

இந்த சமயத்தில், ஆபிரகாமைத் தூண்டியது என்ன? ஆபிரகாம் தன்னுடைய குடும்பத்தை ஆசீர்வதிக்க முயற்சித்துக் கொண்டிருக்க ஒரே வாய்ப்பு உள்ளது. கர்த்தர் ஆபிரகாமை அழைத்த பொழுது, கூறியதாவது: நான் உன்னைப் பெரிய ஜாதியாக்கி, உன்னை ஆசீர்வதித்து, உன் பேரைப் பெருமைப்படுத்துவேன்; "நீ ஆசீர்வாதமாய் இருப்பாய்" (12:2). ஆனால் கோத்திரத் தலைவன் சாராளுடைய காரியத்தில் ஏமாற்றியதின் நிமித்தம், ஆசீர்வாதங்கள் இருக்க வேண்டிய இடத்தில் பார்வோனின் வீட்டாருக்கு "சாபங்களை" (வாதைகள்), வரவழைத்தான் (12:17). ஒருவேளை அவனது தம்பி மகனை, அவனுக்கு வாக்குத்தத்த பூமியில் இஷ்டப் பட்ட இடத்தை, அவன் விருப்பப்படி தேர்வு செய்யும்படி அனுமதித்ததன் மூலம் இந்தத்தடவை

“ஆசீர்வாதமாய் ”

மற்றொரு யோசனைப்படி பார்த்தால், இது ஆபிரகாமுடைய விசுவாசத்தின் ஒரு செயலாக இந்த நடவடிக்கை இருந்துள்ளது. லோத்துக்கு, ஒரு தயாள குணத்துடன், அவன் விருப்பப்படி தேர்வு செய்து கொள்ள அவன் அனுமதித்தது, கர்த்தர் மேல் அவன் வைத்துள்ள அவனுடைய விசுவாசத்தின் வழியைக் குறிப்பதாகவும், அவருடைய திட்டங்களையும், நோக்கங்களையும் செயல்படுத்தும் வழியாகவும் அமைந்திருக்க வேண்டும். எபிரெய நிருபத்தை ஆக்கியோன், ஆபிரகாமைப் பற்றி, “விசுவாசத்தினாலே அவன் வாக்குத்தத்தம் பண்ணப்பட்ட தேசத்திலே பரதேசியைப் போல சஞ்சரித்து, அந்த வாக்குத்தத்தத்திற்கு உடன் சுதந்தரராகிய ஈசாக்கோடும், யாக்கோபோடும் கூடாரங்களிலே குடியிருந்தான்” (எபி. 11:9). வேறு வார்த்தையில் சொல்வதானால், விசுவாசிகளின் தகப்பன் லோத்து தேர்ந்தெடுக்காத அதிகப்படியான பாகத்தை, தனது நிரந்தரமான பங்காக எடுத்துக் கொள்ள எந்த உரிமையும் கோரவில்லை. அவன், கர்த்தருடைய நோக்கத்தின்படி வாக்குத்தத்தப் பூமியைக் கொடுக்க, அவரது காலத்தின்படி நிறைவேற்றுவார் என்று அவரிடமே விட்டு விட்டான்.

**வசனம் 10. லோத்து தன் கண்களை ஏறெடுத்துப் பார்த்து: யோர்தான் நதிக்கு அருகான சம பூமி முழுவதும் நீர் வளம் பொருந்தியிருக்கக்கண்டான்.** யோர்தான் சம பூமியைப் பொறுத்தவரை, விமர்சகர் ஒரு கிரமமான விளக்கத்தின்படி, ஆபிரகாமின் வாழ்க்கையில் அவனுடைய சூழ்நிலைகளையும் பார்த்தால் அது ஒரு எதிர்மறையான தருணமாக உள்ளது என அவனுடைய தினசரி விமர்சனங்களில், விமர்சனமாக கொடுக்கப் பட்டுள்ளது என்றும், **மேலும் அவர் கர்த்தர் சோதோமையும் கொமோராவையும் அழிக்கும் முன்னே**, சோவாருக்கு போம் வழிமட்டும் அது கர்த்தருடைய தோட்டத்தைப் போலவும் எகிப்து தேசத்தைப் போலவும் இருந்தது மற்றும் அவைகளின் பாவம் மிகவும் கொடிதாயிருப்பதினால், ஒரு அழிவு வந்தது என்று கூறியுள்ளார் (13:13; 19:1-29). யோர்தானின் சம பூமியில் சில இடங்களில், எரிகோவைப் போல, மத்திய மலைத்தேசத்தில் இருந்து மழையும், இன்னும் நீரூற்றுகளில் நீர்க்குமிழ்கள் பொங்கி வருவதும், அதன் மூலம் ஏராளமான பயிர்களும் தாவரங்களும் உண்டாயிருந்தன இருந்த போதிலும், கர்த்தர் இந்த சம பூமியில் உள்ள நகரங்களை அழித்த பின், அதிகப்படியான இடங்கள் அதன் வளத்தை இழந்துவிட்டன (19:1-29). தட்ப வெப்ப நிலையிலும், புவியியலிலும் சில மாற்றங்கள் தோன்றியதாலும், இன்று இருப்பதை விட ஆபிரகாமின் காலத்தில் இந்த இடங்கள் அதிக செழிப்பும், வளமும் கொண்டதாக இருந்திருக்கக்கூடும் என விவரிக்கப்படுகிறது.

லோத்து இந்த இடத்தைப் பார்த்த போது (ஏதேனைப் போன்ற

சொர்க்கம்) **கர்த்தருடைய தோட்டம்** எப்படி இருந்திருக்க வேண்டும் என்று மனதில் அவன் எண்ணிப்பார்த்தான்: (அபரிமிதமான தாகவும், பழங்கள் நிறைந்ததாகவும்) (2:8-14; காண்க ஏசாயா 51:3; எசே. 36:35). அவன் பஞ்சத்தில் தற்போது ஆபிரகாமுடைய உடமைகளுடன் பிரயாணப்பட்டு **எகிப்திய பூமிக்குச்** சென்ற போது, அவனுக்கு இவைகள் நிழலாட்டமாக வெளிக்கொணரப்பட்டிருக்க வேண்டும்.

**சோவாருக்கு** [நீங்கள்] **போகும்** போது என்ற சொற்றொடர் ஒரு கஷ்டத்தைக் கொடுக்கிறது, ஏனென்றால் "சோவார்" இருந்த இடம் நிச்சயமற்றதாக இருக்கிறது என்பதால் ஆகும். அது சவக்கடலின்[4] தெற்கு ஓரத்தில் உள்ள ஒரு பட்டணம் என்றும் மற்றும் சோதோமுக்கும், கொமோராவுக்கும் வெகு தெலைவில் இல்லை என்பதாகவும் தெரியவருகிறது (14:2, 8; 19:22-24, 30).[5]

**வசனம் 11.** லோத்தினுடைய தேர்வு, அவனது கண்கள் கண்ட காட்சியைப் பொறுத்தே அமைந்திருந்தது. **அவன் யோர்தானின் சம பூமி எல்லாவற்றையும் தானாகவே தேர்வு செய்து, கிழக்கு திசையை நோக்கி** அவனுடைய எல்லா சம்பத்துகளுடன் அங்கு சென்று குடியேற பயணத்தைத் தொடர்ந்தான் என உரை மூலம் தெரிகிறது. லோத்து எங்கு குடியேறினான் என்பதைப் பற்றி துல்லியமாக ஒருமித்த கருத்து வெளிவரவில்லை; சவக்கடலுக்கு வடக்கு, கிழக்கு, தெற்கு மற்றும் மேற்கு என திசைக் காட்டியின் எல்லா திசைகளிலும் குடியிருந்ததாக பரிந்துரைகள் உள்ளன. லோத்து வாழ்ந்து வந்த பழங்கால சோதோமானது, உண்மையிலே, கடலின் ஒரு பாகத்திற்கு அடியில் இருந்திருக்க வேண்டும் என்றும், ஆகையால் இன்று அதைப் பார்க்க முடியாது என்றும் சிலர் நம்புகிறார்கள்.[6]

இந்த வழியில், ஆபிரகாமும் லோத்தும் **ஒருவரையொருவர் பிரிந்து விட்டனர்**. இந்த குறிப்பிட்டக் காலத்தில் கானானது நிலப் பரப்பின் எல்லைகள் எங்கிருந்தன என்பது தெளிவாக இல்லை. பிறகு, மோசேயின் காலத்தில், எண்ணாகமம் 34:1-12 வரை உள்ள வசனங்களில் வாக்குத்தத்த பூமியின் எல்லைகள் விவரிக்கப் பட்டிருக்கின்றன, அதாவது யோர்தான் நதிக்கு கிழக்கு மற்றும் மேற்கு திசையிலுள்ள நிலப்பரப்பும் அடங்கியதும் ஆகும்; இருப்பினும் ஆதியாகம் 13ல் உள்ள "கானானின் பூமியானது," என்பது யோர்தானுக்கு மேற்கே உள்ள நிலப்பரப்பாக இருந்தது (13:10, 12). ஆகவே, லோத்து கிழக்கு திசையை நோக்கி பயணத்தை தொடர்ந்தது, அவன் கானானின் ஓரத்திலுள்ள நிலப்பரப்பு வரை சென்றும் அதற்கு அப்பாலும் பயணித்திருக்க வேண்டும். ஆதியாகமம் 10:19இல் இந்த நிலப்பரப்பின் எல்லையானது, சோதோம், கொமோரா மற்றும் சம வெளியில் உள்ள பிற நகரங்களும் என்று திட்ட வட்டமாக குறிப்பிடப்பட்டுள்ளது. லோத்து மத்திய மலை நாட்டில் இருந்து கிழக்கு நோக்கியும், பிறகு அவன் உண்மையாகவே, அவனுக்கு பின்னாகத்

திரும்பி வாக்குத்தத்த பூமியில் இருந்து மேலும் பயணத்தைத் தொடங்கி யோர்தான் நதிக்கு கிழக்குப்புறம் குடியிருந்துள்ள அவனது வம்சாவளிகளான மோவாபியர்கள் மற்றும் அம்மோனியர்களின் எல்லைப்புறம் வரை பயணம் செய்திருந்தான். ஆபிரகாமை கிழக்கு திசைக்கு செல்லுமாறு அவனைப் பிரிந்து வந்த லோத்திற்கு, கர்த்தருடைய ஆசீர்வாதத்தை விட்டு தூரம் கடந்து வந்ததைப் போன்றும், அது ஆதியாகமம் 14:12இல் தெளிவாக காணப் படுவதுடன் ஆதியாகமம் 19:12-26 வரை பார்த்தால் அவன் கர்த்தருடைய சாபத்தை வரவழைத்துக் கொண்டதும் தெரிய வருகிறது.

**வசனம் 12.** லோத்தின் விருப்பத்தின் ஒரு முடிவாக, **ஆபிரகாம் கானானின் நிலப்பரப்பில் குடியேறினான் மற்றும் லோத்து சமவெளியின் நகரங்களில் குடியேறினான் என்பது ஆகும்.** இந்த சந்தர்ப்பத்தில், "குடியேறினான்" (יָשַׁב, *yashab*, யசப்) என்ற பதமானது, நிரந்தரமாக ஒரு குறிப்பிட்ட இடத்தில் யாரோ ஒருவர் தங்கியிருந்தார்கள் என்ற பொருள்படுவதாக இல்லை. ஆபிரகாம் ஒரு இடத்தை விட்டு மற்றொரு இடத்திற்கு என்று பயணப்பட்டுக் கொண்டிருந்தான் என்றும், "கூடாரங்களில் குடியிருந்தான்" (எபி. 11:9) என்று இருந்த போதிலும், விசுவாசத்தினாலே அவன் கானானிலே "குடியேறினான்" என்று சொல்லப்பட்டுள்ளது. லோத்தின் விஷயத்திலும், அவன் ஒரு நகரத்திலிருந்து மற்றொரு நகரத்திற்கும் மற்றும் கடைசியில், **சோதோமுக்கு தொலைவில் இருக்குமாறு கூடாரங்களை நகர்த்தினான்** என்பது அதே மாதிரியான உண்மையான காரியமாக உள்ளது. அதற்கு பிறகு, நகர வாழ்வினால் ஈர்க்கப்பட்டு, தூரத்தில் இருக்காமல் நகரத்திற்குள்ளே அவனுடைய குடும்பத்திற்கு ஒரு வீடு அமைத்திருக்க வேண்டும் (14:12).

**வசனம் 13. சோதோமின் ஜனங்கள் பொல்லாதவர்களும் கர்த்தருக்கு முன்பாக மகா பாவிகளுமாயிருந்தார்கள் என்று இந்த சந்திப்பில்**, ஆசிரியர் மற்றொரு இறையியல் விளக்கத்துடன், அவரது வாசகர்களுக்கு இடைக்கூற்றாக கூறியுள்ளார். இந்த கூற்று, சோதோமுடைய இடத்தை நோக்கி நகர்ந்து செல்ல லோத்து தேர்ந்தெடுத்தது, அவனது அறிவின்மையைத் தெரிவிக்கிறது. சான்றாக, அவன் அங்கு வாழ்வதால் அங்குள்ள பாவம் நிறைந்த ஒரு சுற்றுப்புறத்தினால் வரும் அபாயத்தையும் மேற்கொள்ளுமாறு வளமான பொருளாதார ஈர்ப்பு மிக்க யோர்தான் சமபூமியின் மேல் மயங்கி அவன் அதை கண்டு பிடித்தான். சோதோமியர்களின் வாழ்க்கை வழிமுறைப் பற்றி விவரிக்கும் போது அவர்கள் "பொல்லாதவர்களாய்" (רַע, *ra'*, ரே) இருந்தார்கள் என்று தெரிவிக்கிறது. இதே விளக்க பதமானது, ஜலப்பிரளயத்திற்கு முன் உள்ள சந்ததியாருக்கு பயன்படுத்தப்பட்டுள்ளது (6:5; 8:21). எப்படியாயினும், மேலும் அவர்களைப் பற்றி சொல்லும் போது "சோதோம் கொமோராவின்

கூக்குரல் பெரிதாயிருப்பதினாலும், அவைகளின் பாவம் மிகவும் கொடிதாயிருப்பதினாலும்" என்று யெகோவா சொல்வதாக இந்த உரை விரிவுபடுத்தியுள்ளது. இன்றைய உலகத்தில் இது ஒரு உறுதியான தைரியமான காரியமாய் இருந்த போதிலும், நவீன சமுதாயமானது, வயது வந்த இருவர் ஒப்புதல் தெரிவித்து கூடி வாழ்வதில் எந்த வித தவறும் இல்லை என்றும, அது ஒரு தவறான கோணத்தில் அல்லது "பாவச் செயலாகவோ" பார்க்கக்கூடாது என்றும் உரிமைக் கோரிக்கை விடுக்கிறது. ஏராளமானோர், இந்த மாதிரியான ஒரு காரியமானது, கூட உள்ள ஒரு மனிதனுக்கு எதிராக செய்யும் பாவம் என்றும் மற்றும் விரும்பத்தக்க காரியம் அல்ல என்றும் மேலும் இந்த மாதிரியான செயல்கள் எல்லாம் கர்த்தருக்கு எதிரான பாவங்கள் என்றும் ஒப்புக் கொள்ளத்தயங்குகிறார்கள். ஆசிரியர் இந்த நேரத்தில் சோதோமியர்களின் பொல்லாத செயல்களின் இயற்கைத் தன்மையைப் பற்றி விரிவாக சொல்லவில்லை., அவர் சோதோமுக்கும் மற்றும் அந்த சமவெளியில் உள்ள நகரங்களுக்கும் நேரிட்டது பெருங்கேடு தருகின்ற விதி என்று சுட்டிக் காட்டுவதுடன், ஆதியாகமம் 19இல் கூறியுள்ளபடி, அவர்களது பொல்லாத தவறான போக்குகள் தான் காரணம் என்றும் மற்றும் எல்லாவற்றையும் சம்பந்தப்படுத்தி அதில் உள்ளதாவும் குறிப்பிட்டுள்ளார்.

## நிலத்தைக் குறித்த வாக்குத்தத்தத்தை தேவன் புதுப்பித்தல் மற்றும் ஆபிரகாமின் மறுமொழி (13:14-18)

**14லோத்து ஆபிராமைவிட்டுப் பிரிந்த பின்பு, கர்த்தர் ஆபிராமை நோக்கி: உன் கண்களை ஏறெடுத்து, நீ இருக்கிற இடத்திலிருந்து வடக்கேயும், தெற்கேயும், கிழக்கேயும், மேற்கேயும் நோக்கிப்பார். 15நீ பார்க்கிற இந்தப் பூமி முழுவதையும் நான் உனக்கும் உன் சந்ததிக்கும் என்றைக்கும் இருக்கும்படி கொடுத்து, 16உன் சந்ததியைப் பூமியின் தூளைப்போலப் பெருகப்பண்ணுவேன்; ஒருவன் பூமியின் தூளை எண்ணக்கூடுமானால், உன் சந்ததியும் எண்ணப்படும். 17நீ எழுந்து தேசத்தின் நீளமும் அகலமும் எம்மட்டோ, அம்மட்டும் நடந்து திரி; உனக்கு அதைத் தருவேன் என்றார். 18அப்பொழுது ஆபிராம் கூடாரத்தைப் பெயர்த்துக் கொண்டுபோய், எபிரோனிலிருக்கும் மம்ரேயின் சமபூமியில் சேர்ந்து குடியிருந்து, அங்கே கர்த்தருக்கு ஒரு பலிபீடத்தைக் கட்டினான்.**

லோத்து யோர்தான் சமபூமிக்கு பிரிந்து சென்ற பின்பு, கர்த்தர் மறுபடியும் ஆபிரகாமிடம் பேசினார். இதற்கு முன்பு, ஆபிரகா முக்கும், அவனது வம்சாவளிகளுக்கும் கானானை அவர்களது சொந்த பூமியாகத் தருவேன் என்று வாக்களித்திருந்தார் (12:7). இந்த தருணத்தில், கர்த்தர்

மறுபடியும் ஆபிரகாமுக்கு கானானை சொந்த பூமியாகத் தருவதாக வாக்களித்து, ஆபிரகாமையும், அவனது திரளான வம்சாவளிகளையும் ஆசீர்வதித்தார்.

**வசனங்கள் 14, 15.** லோத்து "தன் கண்களை ஏறெடுத்து" பார்த்து யோர்தான் நதிக்கு அருகான சம பூமி மற்றும் கானானின் ஒரு பரப்பின் புற எல்லையும் அதற்கு அப்பாலும் நீர் வளம் பொருந்தினதாயிருக்கக் கண்டான். மேலும், ஒரு சுயநலப் போக்கிலும் அங்கே செல்ல ஒரு துயரமான முடிவெடுத்தான் (13:10, 11) லோத்தினுடைய தீர்மானத்தைத் தொடர்ந்து, **கர்த்தர் ஆபிரகாமை நோக்கி: உன் கண்களை ஏறெடுத்து, நீ இருக்கிற இடத்திலிருந்து வடக்கேயும், தெற்கேயும், கிழக்கேயும், மேற்கேயும்** கானானுக்கு குறுக்கே அமைந்துள்ள பூமியை நோக்கிப் பார். நீ பார்க்கிற இந்த பூமி முழுவதையும் நான் உனக்கும் உனக்குப் பின்வரும் உன் சந்ததிக்கும் என்றைக்கும் இருக்கும்படி கொடுப்பேன் என்றார். கர்த்தர் அவனுக்கும் அவனுடைய வம்சாவளிகளுக்கும் இந்த **பூமியை** கர்த்தருடைய வெகுமதியாக **என்றைக்கும்** (עֹולָם, *'olam*, ஓலம்) பெற்றுக் கொள்ளும்படி, தெய்வீக திட்டங்களுக்கும், நோக்கங்களுக்கும் அடித்தளமான தீர்மானங் களை எடுக்குமாறு, கர்த்தர் அவனுக்கு வழிகாட்டிக் கொண்டிருந்தார்.

ஆதியாகமம் 13:15ம் வசனத்தின் மொழிபெயர்ப்பில் ஒரு சிரமம் எழும்புகிறது, ஏனென்றால் வேதாகம மாணவர்கள், ஆபிரகாமுடைய சந்ததியினருக்கு "என்றைக்கும்" வாக்குத்தத்த பூமியை கர்த்தரிடமிருந்து நிபந்தனையற்றதும், திருப்பக் கூடாததுமான ஒரு வெகுமதியாக பெற்றுக் கொண்டார்கள் என பொருள்படுவதாக அடிக்கடி நினைக்கிறார்கள். இப்படிப்பட்ட ஒரு பார்வையானது, கிறிஸ்தவர்களுக்குள் குறிப்பாக இறையியல் வேறுபாடுகளையும், கிழக்கு திசைக்கு அருகில் உள்ள யூதர்களுக்கும் இஸ்லாமியர்களுக்கும் இடையே அதிகப்படியான அரசியல் மற்றும் இராணுவ குழப்பங்களையும் உண்டாக்கு வதாகவும் அமைந்துள்ளது. "என்றைக்கும்" என்பது ஆபிரகாமின் சந்ததியினர்கள் (இஸ்ரவேலர்) கானானின் பூமியை சுதந்தரித்துக் கொள்ளும் கால அளவைக்குறிக்க ஒரு உதவக்கூடிய மொழி பெயர்ப்பாக இல்லை. *ஓலம்* (*'olam*) என்பது குறிப்பிட்ட காலக் கட்டத்தை குறிக்காமல் "ஒரு நீண்ட காலம்" அல்லது "நீடித்த கால வயதில்" என்று மொழிபெயர்ப்பது சிறந்த ஒன்றாக இருந்திருக்கும்.[7] கர்த்தருக்குக் கீழ்ப்படிவதைப் பொறுத்தே, எப்பொழுதும் நிபந்தனை அல்லது அடிப்படையைக் கொண்டே, இஸ்ரவேலர் சுதந்தரித்த வாக்குத்தத்த பூமியில் இளைப்பாற முடியும் என்று குறிப்பதாகவே, அதிகப்படியான பத்திகளில் சொல்லியிருக்கின்றது.

இஸ்ரவேலர் கானானுக்குள் பிரவேசிப்பதற்கு முன்பாக, தேவனாகிய கர்த்தருடைய உடன்படிக்கைக்கு (பத்துக் கட்டளைகள்

உட்பட) வழி விலகிச் சென்றாலோ மற்றும் அந்நிய தேவர்களைப் பின்பற்றினாலோ, அவர்கள் வாக்குத்தத்த பூமியை இழந்து விடுவார்கள் (உபா. 6:10-15; 11:8, 9; 28:15-21, 36, 37, 58-65) என்று மோசேயினால் மறுபடியும் மறுபடியுமாக அவர்கள் எச்சரிக்கப்பட்டுள்ளார்கள். மோசே அவர்கள் எவைகளைச் செய்யக் கூடாது என்று சொன்னதுடன் சேர்த்து, தேவனாகிய கர்த்தரின் வாக்குத்தத்தத்தின் ஆக்கப் பூர்வமான பக்கத்தையும் வலி யுறுத்தியுள்ளார். அவர்கள் கர்த்தரில் அன்புகூர்ந்து, அவருடைய சத்தத்திற்குச் செவி சாய்த்து கீழ்ப்படிந்து அவரை வன்பிடியாக பற்றிக் கொள்ள வேண்டும். "கர்த்தர் உன் பிதாக்களாகிய ஆபிரகாமுக்கும் ஈசாக்குக்கும் யாக்கோபுக்கும் கொடுப்பேன் என்று அவர்களுக்கு ஆணையிட்டுக் கொடுத்த தேசத்திலே குடியிருக்கும்படிக்கு, உன் தேவனாகிய கர்த்தரில் அன்புகூர்ந்து, அவர் சத்தத்திற்குச் செவி கொடுத்து, அவரைப் பற்றிக் கொள்வாயாக" என்று மோசே கூறினார் (உபா. 30:20).

**வசனம் 16.** இதற்கு முந்தின வசனத்தின்படி, ஆபிரகாமின் "சந்ததியினர்கள்" என்பது பொதுப்படையானதாக இருந்திருந்தது என்று நாம் பார்க்க முடிகிறது. நான் உன்னை "பெரிய ஜாதியாக்கி" (12:2) என்று வாக்குத்தத்தம் இருந்த போதிலும், பழங்காலங்களில் அந்த அளவிற்கு அது குறிப்பிட்டு சொல்லப்படவில்லை, ஏனென்றால் ஒப்பிட்டுப் பார்க்கும் போது அவர்கள் ஒரு சிறு கூட்டமாகவே உள்ளார்கள் என்ற கோணத்தில் நினைத்துப் பார்த்திருக்க வேண்டும். எப்படியாயினும், கோத்திரத் தலைவனுடைய அநேக எண்ணிக்கையான சந்ததியாரைக் குறிப்பிட தேவனாகிய கர்த்தர் இங்கே ஒரு ஒப்பனையைப் பயன்படுத்தியுள்ளார்: ஆபிரகாமுடைய **சந்ததியார்** எண்ணிப் பார்க்க முடியாதவாறு இருப்பார்கள் என்றும், **பூமியின் தூளைப் போலிருக்கும்** என்றும், ஆகையால் அதை ஒருவராலும் **எண்ணிப்** பார்க்க முடியாது என்றும், அவர் அவருடைய திட்டத்தை வெளிப்படுத்தியுள்ளார் (காண்க 15:5; 22:17; 26:4; 28:14; 32:12).

**வசனம் 17.** பழங்காலத்தில், கிழக்கத்திய பிராந்தியத்திற்கு அருகில் உள்ள சில ராஜாக்கள் "சொந்த உரிமை கொண்டாடுவதன் அடையாளமாக" நடை முறைப்படுத்தியதைப் போன்று, கர்த்தர் மேலும் ஆபிரகாமைப் பார்த்து, **நீ எழுந்து தேசத்தின் நீளமும் அகலமும் எம்மட்டோ, அம்மட்டும் நடந்து திரி; உனக்கு அதைத் தருவேன் என்று** சொன்னார்.[8] இது எப்படி நடந்தேறும் என்று கர்த்தர் விவரித்துச் சொல்லவில்லை. அந்த வாக்குத்தத்த பூமியை கானானியர்கள் சுதந்தரித்துள்ளார்கள் என்பதும், மேலும் சாராள் மலடி என்பதும் கோத்திரத் தலைவனுக்கு நன்றாகவே தெரியும். கர்த்தருக்குக் காத்திருந்து, விசுவாசத்தினால் அவருடன் பயணத்தைத் தொடர்வதே அவன் செய்ய முடிந்தவைகள் ஆகும்.

**வசனம் 18.** அவனுடைய பாத்தியதைக்காக பயணப்பட்டபின்,

ஆபிரகாம் **எபிரோனுக்கு**[9] வடக்காக இரண்டு மைல் தொலைவில் உள்ள **மம்ரேயின்** கருவாலி என்று அழைக்கப்படும் நெகேவ் (நேபயள) என்ற சமவெளியைச் சேர்ந்து குடியிருக்க தனது **கூடாரத்தைப்** போட்டான் (காண்க 23:19; 25:9). பின்பு லோத்தையும் அவனுடன் இருந்த சோதோம் மக்களையும் மீட்கவும் மெசபொத்தோமியாவில் உள்ள நான்கு ராஜாக்கள் மீது ஜெயம் கொள்ளவும் ஒரு எமோரியனான (காண்க 14:13) மம்ரே என்பவன் அவனுடைய சகோதரர்களுடன் ஆபிரகாமுக்கு உதவினான் அவன் பெயரிலேயே அந்த இடம் அழைக்கப்பட்டது (14:14-16). பலவித தெய்வ வணக்கம் கொண்ட கானானிய ஜனத்தொகையில், ஆபிரகாமுக்கு சில நண்பர்கள் இருந்த போதிலும், தொழுது கொள்வதற்கு அவன் பல தெய்வ வணக்கம் கொண்ட பலிபீடம் உள்ள எந்த ஒரு இடத்தையும் தவிர்த்தான். கர்த்தரைத் தொழுது கொள்ள கானானிய இடத்தை தேடிக் கொண்டிருப்பதை விட, அவன் இதற்கு முன்பு உள்ள தருணங்களில் செய்தது போல, **கர்த்தருக்கு ஒரு பலிபீடத்தைக் கட்டினான்** (12:7, 8). ஒருவனை வெகு ஏராளமாக ஆசீர்வதித்ததின் நிமித்தமும், ஏராளமான சந்ததியாருக்கும் வாக்குத்தத்த பூமியைக் கொடுத்து, அவர்களை அங்கே பெருக்கத்துடனும், வளமையுடனும் இருக்கச் செய்வேன் என்ற கர்த்தரின் வாக்குத்தத்தத்தின் நிமித்தமும், கர்த்தருக்கு நன்றி சொல்லும் விருப்பமுடையவனாய் அவன் இருந்திருக்க வேண்டும் என்பதை நாம் அனுமானிக்க முடிகிறது.

## நடைமுறைப்படுத்துதல்

### ஆசீர்வாதங்களின் "ஆபத்து" (அதிகாரம் 13)

கர்த்தருடைய ஏராளமான முன் ஏற்பாடுகள் எல்லாம் ஆசீர்வாதங்கள் அல்லது சாபங்களுக்கு வழிகாட்டியாக இருக்கும். ஆதியிலிருந்தே தேவன் அவருடைய ஜனங்களை ஆசீர் வதிப்பதிலேயே விருப்பமுடையவராய் இருந்தார். தேவன் ஒரு அழகான உலகத்தை சிருஷ்டித்து, ஒரு முழு நிறைவான சூழ் நிலையில் ஆதாமையும், ஏவாளையும், அதில் வைத்திருந்தார்: சரீர சம்பந்தமான வாழ்வை தக்க வைத்துக் கொள்வதற்கு ஏற்றவாறு நீர்ப்பாய்ச்சலுடனும், பார்வைக்கு அழகும், புசிப்புக்கு நலமுமான சகல வித விருட்சங்களையும் சொர்க்கம் போன்ற ஒரு தோட்டத்தில் வைத்திருந்தார். "தேவனாகிய கர்த்தர் மனுஷனை நோக்கி: நீ தோட்டத்திலுள்ள சகல விருட்சத்தின் கனியையும் புசிக்கவே புசிக்கலாம். ஆனாலும் நன்மை தீமை அறியத்தக்க விருட்சத்தின் கனியைப் புசிக்கவேண்டாம்; அதை நீ புசிக்கும் நாளில் சாகவே சாவாய் என்று கட்டளையிட்டார்" (2:16, 17). இருந்தாலும், சர்ப்பம் ஏவாளை நோக்கி: "நீங்கள் தோட்டத்திலுள்ள

சகல விருட்சங்களின் கனியையும் புசிக்கவேண்டாம் என்று தேவன் சொன்னது உண்டோ என்றது. ஸ்திரீ சர்ப்பத்தைப் பார்த்து: நாங்கள் தோட்டத்திலுள்ள விருட்சங்களின் கனிகளைப் புசிக்கலாம்; ஆனாலும், தோட்டத்தின் நடுவில் இருக்கிற விருட்சத்தின் கனியைக்குறித்து, தேவன்: நீங்கள் சாகாதபடிக்கு அதைப் புசிக்கவும் அதைத் தொடவும் வேண்டாம் என்று சொன்னார் என்றாள். அப்பொழுது சர்ப்பம் ஸ்திரீயை நோக்கி: நீங்கள் சாகவே சாவதில்லை; நீங்கள் இதைப் புசிக்கும் நாளிலே உங்கள் கண்கள் திறக்கப்படும் என்றும், நீங்கள் நன்மை தீமை அறிந்து தேவர்களைப்போல் இருப்பீர்கள் என்றும் தேவன் அறிவார் என்றது" (3:1-5). அவர்கள் தேவனைப் போல் ஆக வேண்டும் என்ற விருப்பம் உடையவர்களாய் இருந்தார்கள்; அவர்களுக்கு ஞானம், பெலன் மற்றும் இறுதிவரை வளமை மற்றும் ஒன்றும் குறைவில்லாமல் எல்லா வளமையும் அவர்களைத் தொடர்ந்து வரவேண்டும் என்ற விருப்பம் உடையவர்களாய் இருந்தார்கள். அவர்களால் எதையும் திரும்ப தக்க வைத்துக் கொள்ள முடிய வில்லை.

மனிதன் ஒரு சரீர சம்பந்தமான உயிரினமாய் இருப்பதாலும் மற்றும் எல்லாவித ஆசீர்வாதங்களையும் உடையவனாய் இருந்த போதிலும் அவன் என்றுமே தேவனாய் மாற முடியாது என்பதைக் கர்த்தர் அறிந்திருந்தார். அது கூட நடக்கக் கூடிய ஒன்றாய் இருந்திருந்தாலும், சரீர பிரகாரமான செல்வம் மற்றும் ஆசீர் வாதங்கள், என்றுமே ஆனந்தம், என்றுமே திருப்தி அல்லது எல்லா நன்மைகளையும் ஒரு போதும் தர முடியாது. இதற்கு நேர் மாறாக, அதிகம் இருக்கும் ஒருவன் இன்னும் அதிக தேவை உடையவனாய் காணப்படுவான் என்பது மனிதனுடைய போக்காகும். மனிதனுடைய உலகப் பிரகாரமான ஆசீர்வாதத்திற்கான தாகமானது ஒரு போதும் ஒழிந்து போனதில்லை. செல்வமும் உடைமைகளும் கொண்டிருப்பது அவசியப்படி பார்த்தால் தீமையானதல்ல. நியாயப்படி, அவைகள் ஒரு குடும்பத்திற்கு பயன்பட்டாலும் மேலும் குறைந்த நல் வாய்ப்புடைய மற்றவர்களின் வாழ்விற்கு ஆசீர்வாதமாய் இருந்தாலும் இவைகள் நல்லவைகளாகக் கருதப்படும். எப்படி இருப்பினும், செல்வமும், உடமைகளும் அபாயகரமானவைகள், ஏனென்றால் என்றுமே இல்லாத அளவில், அதின் தூண்டுதல்களினால், அவைகளை இச்சித்து, அதனால் அவைகளுடன் சுயநல வாதியாக மாறியும் மற்றும் எவைகளை வாங்குவது மற்றும் தக்க வைத்துக் கொள்வது என்பதற்கே முதன்மை இடம் கொடுத்து வாழுகிறார்கள்.

பண ஆசையானது நிறைய குடும்பஙகளில் சண்டைகளை உண்டாக்கி, மேலும் குடும்பங்கள் பிளவுபடவும் காரணமாகிறது, ஏனென்றால் மக்கள் சரியான முன்னுரிமைகளைக் கொண்டவர் களாக இல்லை என்பதே ஆகும். அதிகப்படியான செல்வம் வேண்டும் என்று ஆசை வைத்து அதன் மூலம் சக்தி பெற வேண்டும் என்றிருப்பதனால்,

மக்கள் அவர்களது வாழ்க்கையைப் பாழாக்கிக் கொண்டிருக்கிறார்கள். அத்துடன், அவர்களது இலட்சியத்தை அடைய, எத்தனை வகையான ஒழுக்கமற்ற அல்லது நீதி நெறியற்ற செயல்களைச் செய்கிறார்கள் என்பதைப் பற்றி எந்தக் கவனமும் எடுத்துக் கொள்வதில்லை. முன் நடத்துபவர்களின் செல்வம் சேர்க்க வேண்டும் என்ற தாகத்தினாலும் மற்றும் திறனைக் காட்ட வேண்டும் என்ற தணியாத தாகத்தாலும், போர் களங்களில் ஆயிரம், ஆயிரமானோர் மடிகின்றனர்.

பவுல் தீமோத்தேயுவிற்கு நினைவு படுத்துகிறார், "உலகத்திலே நாம் ஒன்றும் கொண்டு வந்ததுமில்லை, இதிலிருந்து நாம் ஒன்றும் கொண்டு போவதுமில்லை என்பது நிச்சயம். உண்ணவும் உடுக்கவும் நமக்கு உண்டாயிருந்தால் அது போதும் என்றிருக்கக் கடவோம்" (1 தீமோ. 6:7, 8). அப்போஸ்தலர் ஐஸ்வரியத்தின் அபாயத்தைக் குறித்து குறிப்பிட்டுச் சொல்லியுள்ளார் (1 தீமோ. 6:9). மேலும் அத்துடன் அவர் "பண ஆசை" அப்படிச் செய்யும் பணம் மட்டுமே மக்களின் வாழ்க்கையைப் பாழாக்கியும் அழித்தும் போடாது, ஆனால் என்று கூறியுள்ளார். பண ஆசை "எல்லாத் தீமைக்கும் வேராயிருக்கிறது: சிலர் அதை இச்சித்து, விசுவாசத்தை விட்டு வழுவி, அநேக வேதனைகளாலே தங்களை உருவக் குத்திக் கொண்டிருக்கிறார்கள்" (1 தீமோ. 6:10; காண்க மத். 6:19-24; லூக். 12:15-21; 1 யோவான் 2:15-17). ஆதியாகமம் 13ம் அதிகாரம், ஆபிரகாமும், லோத்தும் எதிர்கொண்ட ஞானம், பெலன், செல்வம் மற்றும் உடைமைகளை இச்சிப்பதால் வரும் சோதனைகளின் அபாயத்துடன் துவங்குகிறது.

*செல்வமும் உடைமைகளும் சச்சரவிற்கு வழி காட்டும்* (13:1-7). ஆபிரகாம் எகிப்திலிருந்து திரும்பி வந்த பின், உண்மையாகவே அவன் ஒரு செல்வந்தனாக இருந்தான். அவன் ஆரானை விட்டு கானானுக்குப் பிரயாணப்படும் போது, ஏற்கனவே அவன் மந்தைகளும், கால்நடைகளும்; மற்றும் ஏராளமான சவதரித்த ஜனங்களையும் கொண்ட செல்வ சீமானாயிருந்தான் மற்றும் அவன் தன் வீட்டிலே பிறந்த கைபடிந்தவர்களாகிய முந்நூற்றுப் பதினெட்டு ஆட்களை உள்ளடக்கியவனாயும் (14:14) இருந்தான் என்பது நமக்குத் தெரியும். சாராளை அவனுடைய சகோதரி என்று பார்வோன் நம்பும்படியாக ஏமாற்றியதன் நிமித்தம், ராஜா அவனுக்கு வெகுமதிகளாக ஆடு மாடுகளும், கழுதைகளும், வேலைக்காரரும், வேலைக்காரிகளும், கோளிகைக் கழுதைகளும் மற்றும் ஒட்டகங்களும் கொடுத்ததினிமித்தமும் அத்துடன் அவன் எகிப்தை விட்டு வெளியேறும் போது வெள்ளியும், பொன்னுமான ஆஸ்திகளை உடைய சீமானாயிருந்தான் (12:16, 20). ஆபிரகாம் கானானுக்குத் திரும்பி வந்த போது அவன் "சீமானாயிருந்தான்" என்று மறை நூல் கூறுகிறது (13:1, 2).

லோத்தும் அதைப் போலவே, காலப்போக்கிலே அதிக மதிகமாய்

வளமை பெற்று செழிப்புற்றிருந்தான். அவன் எகிப்திலிருந்து திரும்பி வந்த பொழுது, "அவனுக்கு" ஏராளமான மந்தைகளும், கால்நடைகளும் மற்றும் கூடாரங்களும் இருந்தன (13:5). "கூடாரங்கள்" என்ற பதமானது, அவனிடம் ஏராளமான வேலைக்காரர், வேலைக்காரிகள் உள்ளடக்கிய மந்தை மேய்ப்பர்கள் அவனுடைய மிருக ஜீவன்களை போஷிப்பதற்கும் மற்றும் அவைகளைப் பாதுகாப்பதற்கும் இருந்திருக்க வேண்டும் என்பதைச் சுட்டிக் காட்டுகிறது. உண்மையாகவே, அவர்கள் இருவருக்கும் இருந்த மந்தைகளையும், கால்நடைகளையும் "அந்தப் பூமி அவர்களைத் தாங்கக்கூடாததாயும், அவர்கள் ஒருமித்து குடியிருக்கக் கூடாததாயும் இருந்தது" (13:6). "ஆபிரகாமுடைய மந்தை மேய்ப்பருக்கும் லோத்துடைய மந்தை மேய்ப்பருக்கும் வாக்குவாதம் உண்டாவதற்கு," இது வழி வகுத்துள்ளது (13:7). கானானியரும், பெரிசியரும் அத்தேசத்திலே அதிகப்படியான இடத்தை சுதந்தரித்துக் கொண்டிருந்ததின் நிமித்தம், பெரிய தகப்பனாரும், தம்பி மகனும் ஒருமித்துக் குடியிருப்பதற்கும் மற்றும் போதுமான புல்வெளி நிலங்கள் இல்லாமையும், ஒரு நம்பக் கூடிய காரணமாய் இருக்கிறது (13:7).

உணவுக்காகவும், தண்ணீருக்காகவும் நடைபெற்ற சச்சரவுகளின் நிமித்தம், அவர்களுடைய மந்தைகள், கால்நடைகள் அத்துடன் மந்தை மேய்ப்பர்கள் அவர்களுடைய குடும்பங்கள் அடங்கிய செல்வங்கள் பாதிக்கக் கூடிய சூழ்நிலையானது, ஆபிரகாமும் லோத்தும் ஒரு இக்கட்டான சச்சரவை சந்திக்கும்படியாகிவிட்டது. எதுவரையிலும், இருவரும் தனிப்பட்ட முறையில் இந்தச் சச்சரவில் ஈடுபட்டிருந்தார்கள் என்பதைப் பற்றி மறை நூல் எதுவும் சொல்லவில்லை. ஆனால், இந்த நிலையில் இந்த மோதலானது வன்முறையாக மாறியிருக்குமானால், தனிப் பட்ட முறையில் அவர்களும், அவர்களுடைய வேலைக்காரரும். வேலைக்காரிகளும், அழிவுக்குரிய விளைவுகளை சந்தித்திருக்க வேண்டியிருந்திருக்கும். இம்மாதிரியான பகைமை, அயல்தேசத்து குழுக்களுக்கிடையே இருந்திருப்பது, கானானியரும், பெரிசியரும் பலவந்தமாக இவர்களைத் தாக்குவதற்கான வாய்ப்பினை ஏற்படுத்தும். ஓர் ஒருங்கிணைந்த முற்போக்கு இல்லாவிடில், மறைந்திருக்கும் விரோதிகளால், எளிதில் அவர்கள் தோற்கடிக்கப் பட்டு விடுவார்கள்.

"பொறாமைகள்," "விரோதங்கள்" மற்றும் "கோபங்கள்" (கலா. 5:20) ஆகியவைகளின் வரிசையில், அத்துடன் சேர்த்து, "சச்சரவும்" மாம்சத்தின் ஒரு கிரியையாயிருக்கிறது. இந்த குணாதிசயங்களெல்லாம், ஆவியின் கனிகளில் (கலா. 5:22, 23) குறிப்பாக ஒப்புயர்வற்ற அன்பிற்கு எதிராக அப்பட்டமான வேறுபடும் பண்பாக நிற்கிறது. "பகை விரோதங்களை எழுப்பும், அன்போ சகல பாவங்களையும் மூடும்" (நீதி. 10:12) என்று ஞானி நீதிமொழிகளில், இதே மாதிரியான ஒரு கண்காணிப்பையும் மற்றும் "பெரு நெஞ்சன் வழக்கைக் கொளுவுகிறான்" (நீதி. 28:25) என்றும் தெரிவித்துள்ளார். அன்பு

தணியும் போது, அதற்குப் பின்னால் நிற்கிற மாம்சத்தின் கிரியைகளான பொறாமைகள், விரோதங்கள் மற்றும் கோபங்கள் வெளிப்பட்டு, இத்தகைய செயல்கள் சச்சரவிற்கும் மற்றும் மனித உறவுகளுக்கு இவையெல்லாம் இடையூறாக இருக்கும் என்று மறை நூல்கள் தெளிவாக போதிக்கின்றன.

*விசுவாச வழியில் நடப்பவர்கள் தயாள குணம் கொண்ட அவர்களது செயல்களால் சமாதானத்தை நிலை நிறுத்துகிறவர் களாய் இருக்க முடியும்* (13:8, 9). ஆபிரகாமின் தீர்மானமானது விலை மதிப்பற்றதாய் இருப்பினும், அவர் இன்னல் உண்டாக்கு பவராய் இராமல், சமாதானம் பண்ணுகிற ஒருவராய் இருந்தார். ஆபிரகாமின் சகோதரனான ஆரானின் குமாரனாகிய லோத்து, மற்றும் லோத்தின் பெரிய தகப்பனான அவன் இளையவனுக்கு அவனது தகப்பன் ஸ்தானத்தை நிரப்புகிறவராய் இருந்தார். இந்த ஸ்தானமானது, அவனுக்கு தேவையான பூமியின் பாகத்தை முதலில் தெரிவு செய்து, அவனும் அவனது சம்பத்துக்கள் எல்லாம் சுதந்தரித்துக் கொள்வதாய் இருப்பினும், அவன் அவ்வாறு செய்யாமல், பெருந்தன்மையுடன் லோத்தை முதலில் தேர்வு செய்யும்படி அனுமதித்தது, ஆபிரகாம் செய்த காரியம் கிட்டத்தட்ட எங்கும் கேள்விப்படாத ஒரு காரியமாய் இருந்தது.

“உனக்கும் எனக்கும் வாக்குவாதம் வேண்டாம்” என்று ஆபிரகாம் சொன்ன பொழுது (13:8), “*சச்சரவு*” (מְרִיבָה, *m<sup>e</sup>ribah*, மேரிபா) என்று மொழி பெயர்க்கப்பட்டுள்ளது. வனாந்திரத்தில் அருந்துவதற்கு தண்ணீர் இல்லாததினால், அங்கு என்ன நடந்தது என்பதை பிந்திய இஸ்ரவேல் பார்வையாளர்களுக்கு, இந்த வார்த்தையானது சிறப்பு முக்கியத்துவம் உடையதாக இருந்திருக்கும். இஸ்ரவேல் புத்திரர் வாதாடினதினிமித்தமும், கர்த்தர் எங்கள் நடுவில் இருக்கிறாரா அல்லது இல்லையா என்று அவர்கள் கர்த்தரைப் பரீட்சை பார்த்ததின் நிமித்தமும் அவர்கள் மோசேக்குக்கு எதிராக “சண்டை” (רִיב, *rib*, ரிப்) அல்லது சச்சரவு பண்ணினார்கள் என்று யாத்திராகமம் 17:7இல் சொல்லப் பட்டுள்ளது. மேரிபா (*m<sup>e</sup>ribah*) என்ற பதமும் கூட, கர்த்தருடன் இஸ்ரவேலர் செய்த வாக்குவாதம் என்ற பொருள்பட பயன்படுத்தப்பட்டுள்ளது. இது, அவருடன் ஒரு வலுமையான வாக்குவாதம் அல்லது ஊக்கமுள்ள வாதத்தில் ஈடுபட்டனர் என்ற கருத்தைத் தெரிவிக்கிறது. வனாந்தரத்தில் கோபம் மூட்டின போதும் சோதனை நாளிலும் நடந்தது போல, உங்கள் இருதயத்தைக் கடினப்படுத்தாதேயுங்கள் என்று சங்கீதக்காரன் கூறியுள்ளார் (சங். 95:8). லோத்துடைய மந்தை மேய்ப்பருக்கும் ஆபிரகாமுடைய மந்தை மேய்ப்பருக்கும் இடையே உள்ள வலுவான கருத்து வேற்றுமைகள், ஒரு வன்முறையாக மாறிவிடும் என்பதை உணர்ந்த ஆபிரகாம், இம்மாதிரியான சம்பவம் நடப்பதைத் தவிர்ப்பதற்காக வேகமாக செயல்பட்டுள்ளார்.

ஒருவரது சுய விருப்பத்தையும், மற்றும் அவரது சொந்த வழிக்கேற்றாற் போல் செயல்படுவதை விட, சகோதரர் களுக்குள்ளே சமாதானம் நிலவுவது மிகவும் முக்கியமானது என்பதில், ஆபிரகாம் உறுதியுடன் இருந்தார். இதுவே, பிறகு இயேசு அவரது வாழ்க்கையில் செயல் விளக்கம் அளித்துள்ளதும் மற்றும் பிலிப்பி சபை மக்கள் ஒரு பிரிவினை ஆவியினால் தத்தளித்துக் கொண்டிருக்கும் பொழுது, பவுல் அங்குள்ள சில கிறிஸ்தவர்களிடம் உற்சாகத்தை ஊட்டியதும், இதே மாதிரியான எண்ணம் கொண்ட செயலாகும். “ஒன்றையும் வாதினாலாவது வீண் பெருமையினாலாவது செய்யாமல்” ஒருவரிலொருவர் அன்புகூர்ந்து, கூடி இருக்கும் நோக்கத்தை அவர் அவர்களிடம் வலியுறுத்தி யுள்ளார் (பிலி. 2:3). மேலும் “அவனவன் தனக்கானவை களையல்ல, பிறருக்கானவைகளையும் நோக்குவானாக” என்று அவர்களுக்கு நற்போதனை செய்துள்ளார் (பிலி. 2:4). இயேசு தேவனுடைய ரூபமாயிருந்தும், தேவனுக்குச் சமமாயிருப்பதைக் கொள்ளையாடின பொருளாக எண்ணாமல், தாழ்மையிலும், சுயநலமில்லாமையிலும் இருந்த அவரை இறுதி மாதிரியாக வைத்து பவுல் கடைப் பிடித்தார். கிறிஸ்து ஒரு மனித அவதாரம் எடுத்து இப்பூமிக்கு வந்து, மனித சமுதாயத்தினர் எல்லோரது பாவங் களுக்காக, சிலுவையில் மரணபரிந்தயமும் கீழ்ப்படிந்தவராகி, தம்மைத்தாமே தாழ்த்தினார் (பிலி. 2:5-8; காண்க 1 யோவான் 2:1, 2).

*கண்களை ஏறெடுத்துப் பார்த்து அதன்படி நடப்பவர்கள், அடிக்கடி சுலபமாக ஏமாற்றுப்படுவதுடன், மேலும் அது துக்ககரமான முடிவிற்கும் நடத்திச் செல்லும்* (13:10-13). லோத்து, ஆபிரகாமை விட மிகவும் வித்தியாசமான குணம் கொண்ட ஒருவனாய் இருந்தான்; பெரிய தகப்பன் ஒரு சமாதான காரணராய் இருந்த போதிலும், தம்பியின் குமாரன் ஒரு சச்சரவு உண்டாக்குபவனாய் அறிமுகப்படுத்தப்பட்டுள்ளான். அவனது எஞ்சிய காலங்களிலும், எங்கெல்லாம் அவன் சென்றானோ, அங்கெல்லாம் கஷ்டங்களை அவன் எப்பொழுதும் எதிர் கொண்டவனாயிருந்தான். லோத்து ஒரு பொல்லாங்கானவன் அல்ல, நேர் எதிர்மறையாக, சோதோமிலுள்ள பொல்லாங்கான மக்களுடன் ஒப்பிட்டுப் பார்க்கும்போது, அவன் ஒரு “நீதிமான்” என்று விவரிக்கப்பட்டிருக்கிறான் (2 பேதுரு 2:7-9). எப்படி இருந்தாலும், லோத்து ஒரு தொடர்ச்சியாக தீய தீர்மானங்களை எடுத்திருந்தான் மேலும் அதற்குக் காரணம் ஒரு இருதயமாக இருந்தது. அவன் “தேவனுக்கும் உலகப் பொருளுக்கும்” ஊழியஞ் செய்ய முயற்சித்தான் (மத். 6:24), மற்றும் அவன் “கண்களின் இச்சைக்கு” அடிபணிந்து போனான் என்பதே முடிவாயிருந்தது (1 யோவான் 2:16).

லோத்து “தன் கண்களை ஏறெடுத்துப் பார்த்து: யோர்தான் நதிக்கு அருகான சமபூமி முழுவதும் நீர் வளம் பொருந்தின தாயிருக்கக் கண்டான் … அது கர்த்தருடைய தோட்டத்தைப் போலவும் … இருந்தது”

(13:10) என்று மறை நூல் நமக்கு அறிவிப்பதைப் பார்க்கும் போது, லோத்தினுடைய மதிப்பீடானது சரியான ஒன்றாகவே இருந்துள்ளது. அவன் எதிர்பார்த்ததை விட, பட்டு பருத்தி கம்பளத்தால் ஆன மெத்தை துணி போன்ற பூமியின் வளத்தைப் பார்த்த படியினால், "லோத்து அந்த யோர்தானுக்கு அருகான சமபூமியிலுள்ள பட்டணங்களில் வாசம் பண்ணி, சோதோமுக்கு நேரே கூடாரம் போட்டான்" (13:12). யோர்தானுக்கு அருகான சமபூமியில் என்ன மாதிரியான ஜனங்கள் வசிக்கிறார்கள் என்றோ அல்லது தேவனுக்கு பயந்த வாழ்க்கை நடத்த முயற்சிக்கும் விசுவாச மக்களுக்கு அந்தச் சூழ்நிலை விரோதமாக இருந்திருக்கும் என்றோ, லோத்து விசாரித்திருப்பானோ என நாம் நினைத்துப் பார்க்க காரணம் எதுவும் இல்லை. அவன் ஆவிக்குரிய வாழ்வில் ஆழமில்லாமல் இருந்ததாலும் மற்றும் அவன் கண் காணும் காட்சிகளில் எல்லாம் மயங்கி விழுபவனாயும் இருந்தான் என விவரித்து குறிப்பிடப்படுகிறது: அந்தப்பூமியின் வளமையும் மற்றும் செல்வமும் அவனை இழுத்துச் சென்றிருக்க வேண்டும். கண்ணுக்கு தெரியாமல் அங்கே மறைவாக இருக்கும். எந்த ஒரு ஆபத்தைக் குறித்தும் எண்ணிப் பார்க்காமல், லோத்து உலக ஞானத்தைப் பின் பற்றிச் சென்றதாலும், அவனுடைய "சுய குறிக்கோளினாலும்" சச்சரவுக்குள்ளாக்கப்பட்டான் (காண்க யாக். 3:13-16). அவனுடைய தேர்வானது, அவனையும், அவனது குடும்பத்தையும் அழிவுக்கு நேராக வழி நடத்திச் சென்றது (ஆதி. 19:1-38).

அடிப்படையிலே சுயம் சம்பந்தப்பட்டது, லோத்து, ஏதேன் தோட்டத்திலிருந்த முதல் தம்பதியைப் போல இருந்தார். தோட்டத்திலிருந்த நன்மைத் தீமை அறியும் விருட்சத்தின் கனியைப் புசிக்கக் கூடாதென ஆதாமை தேவன் எச்சரித்தார், மரண எச்சரிப்பை அவன் கட்டாயம் ஏவாளிடம் சொல்லியிருக்க வேண்டும். தடை செய்யப்பட்ட கனி அவளுக்கு மிகுந்த மேற்கொள்ள இயலாத சோதனையை ஏறபடுத்தியது. ஆதாமுக்கும் இதே நிலைதான் (3:6). இந்தக் காரியத்தில் அவர்கள் தேவனுடைய ஞானத்தை விட உலக (சர்ப்பத்தின்) ஞானத்தைத் தேர்வுச் செய்தனர். இதன் பலனாக அவர்கள் ஏதேன் தோட்டத்திலிருந்து துரத்திவிடப்பட்டனர் (3:22-24).

பழைய ஏற்பாட்டு வரலாறில் வேறு சிலரும் தாங்களும் எதை "பார்த்தார்களோ" அதிலே சோதிக்கப்பட்டு, விழுந்துப்போனார்கள். "தேவ குமாரர்கள்" "மனுஷ குமாரத்திகளை" பார்த்து, தங்களுக்கு மனைவிகளைத் தெரிவுச் செய்தனர். அவர்கள் துன்மார்க்கத்திற்கும், கலகத்திற்கும், உலக அழிவிற்கும் வழி வகுத்தார்கள் (6:1-7, 11-13). அதுபோலவே ஆகான் எரிகோவில் தடைச் செய்யப்பட்ட வெள்ளியையும், பொன்னையும் கண்டு, சோதனையால் மேற்கொள்ள அவைகளைத் திருடி தனக்கும் தன் குடும்பத்திற்கும் அழிவை வரவழைத்தான் (யோசுவா 7:19-26). அரண்மனை

உப்பரிக்கையிலிருந்து தாவீது கீழேப் பாரக்கையிலே, அழகுப் பெண்ணொருவர் நீராடுவதைக் கண்டது (ஒருவேளை நடு கொலு முற்றத்திலிருக்கலாம். அது அவளது வீட்டிற்குள் இருக்கலாம்) அவன் இருதயத்தில் இச்சையைத் தூண்டியது. இச்சைக்கு இடம் கொடுத்ததினால் விபச்சாரத்திற்கும், அவளது புருஷனுடைய கொலைக்கும், அதனால் தாவீதின் வீட்டிற்கு துக்கத்தையும், மரணத்தையும் வரவழைத்தான் (2 சாமு. 11:1-12:23).

## சண்டைப் பிரச்சனைகள் (13:7, 8)

பல உறவுகள் சண்டை ஏற்படுத்திய அழிவு சில திருஷ்டாந்தங்களைக் கீழேக் காணலாம்.

*திருமணங்களில்:* ஆபிரகாம், சாராள் மற்றும் ஆகார் (16:1-9; 21:8-12); யாக்கோபு, ராகேல் மற்றும் லேயாள் (29:21-30:24).

*குடும்பங்களில்:* காயீன் மற்றும் ஆபேல் (4:1-15; 1 யோவான் 3:10-14); யாக்கோபு மற்றும் ஏசா (25:22-34; 27:1-45); யோசேப்பும் அவன் சகோதரர்களும் (37:2-28).

*சமுதாயத்தில்:* இஸ்ரவேலரின் குலப்பொறாமை: எப்பிராயி மர்கள் மனாசேயின் கிதியோன் மீது புகார் செய்தல் (நியா. 6:11-15; 8:1-21).

*அரசியலில்:* அப்சலோம் தன் தகப்பனாகிய தாவீதிடமிருந்து ராஜ்ஜியத்தைப் பிடிக்க முயற்சி (2 சாமு. 15:1-18:33); தேவனுடைய மக்கள் இஸ்ரவேரின் வடக்கு ராஜ்ஜியம் மற்றும், யூதாவாகிய தென் ராஜ்ஜியம் என துக்ககரமாக பிளவுப்பட்டது (1 இராஜா. 12:1-33).

*திருச்சபையில்:* ரோமாபுரி (ரோமர். 12:16-18; 13:13-15:7) மற்றும் கொரிந்து (1 கொரி. 3:1-5, 21-23; 4:1-21; 8:1-3; 13:1-13). திருச்சபையிலும், பொறாமையும், தன்னலமும் கொண்ட மக்களால் பிரச்சனை.

## ஆபிரகாம் தேவனை நம்புதல் (13:14-18)

வாக்குத்தத்த நாட்டைப் புதுப்பிப்பதின் மூலம் ஆபிரகாமின் விசுவாசம் கனப்படுத்தப்பட்டது. ஆபிரகாம் லோத்தை மகன் போல் சிநேகித்தார் (13:2-12) எனச் சொல்கிறது. ஆபிரகாமின் சகோ தரனும், லோத்தின் தகப்பனாருமாகிய ஆரான் மரித்த பின் ஆபிரகாம் லோத்தை தன் அரவணைப்பில் ஏற்றுக்கொண்டார். தேவன் அவரின் சொந்த பந்தங்களை ஆரானில் விட்டு விட்டு வரும்படியாக தேவன் சொல்லியிருந்தும் ஆபிரகாம் தன் பிரயாணத்தில் லோத்தை தன்னோடு கானானுக்குக் கூட்டி வந்தார். அவர் தன் சொத்தில் பெரும் பாகத்தை தன் சொந்தக்காரர் லோத்துடன் பகிர்ந்திருக்கலாம். தானும் அவன் மக்களும் சுதந்தரிக்ககூடிய வாக்குத்தத்த நாட்டில் லோத்து முதலாவது தேர்வுச் செய்ய அனுமதியளித்தார். லோத்து தன் மக்களுடனும்,

சொத்துச் சுகங்களுடனும் பிரிந்து போனப் பின்பு ஆபிரகாமின் இருதயம் வெறுமையை உணரலாயிற்று, ஒரு தாங்குதல் வேண்டியதாயிற்று.

முற்பிதாவானவர் முன்னதாகவே வாழ்வில் தாழ்ந்த நிலையை கடைப்பிடித்துக் கொண்டிருக்கிறார் எகிப்திலே சாராவைக் குறித்து தன்னலத்துடன் பொய்ச் சொன்னதிலே, இப்போது லோத்து தன்னை விட்டுப்பிரியும் போது அவர் மிக உன்னதமான ஒரு செயலைச் செய்கிறார். லோத்துத்தானே யோர்தானின் செழிப்பான பள்ளத்தாக்கை தேர்வுசெய்ய அனுமதிக்கிறார்; இருப்பினும் லோத்தும் அவன் கூட்டத்தாரும் செல்வதை கவனிக்கிறார். ஒரு வேளை இன்னொருமுறை சோர்வுக்குள்ளாகிறார். அதன் மகன் போன்ற ஒருவரை இழக்கிறார் அவ்வளவுதான். அத்துடன் கானானின் மிகச்சிறப்பான ஒரு இடத்தையும் இழக்கிறார்.

ஆபிரகாமின் காலியான இருதயம் தேவனுக்குத் தெரியும், முற்பிதா தம்மை நோக்கி கூப்பிட வேண்டுமென அவர் எதிர்பார்க்கவில்லை, இந்த சந்தர்ப்பத்தில் யெகோவா அவனைத் தேடிவந்துச் சொன்னார் “நீ வானத்தை அண்ணாந்துபார்,” லோத்து தன் கண்களை ஏறிட்டுப் பார்த்ததற்கு எதிரிடையாக ஆண்டவர், “அண்ணாந்துப் பார்க்கும்படி” சவால் விடுகின்றார் லோத்து “கண்டு” (13:10, 14) எனப் பதிவு செய்யப்பட்ட கூற்று “அவன் தனக் கென தெரிந்துக் கொள்ளுகின்றான்” செழிப்பான யோர்தான் பள்ளத்தாக்கு (13:11); ஆனால் தேவன் ஆபிரகாமுக்குள்ள தேசத்தின் பங்கு அவருடைய பரிசு என வலியுறுத்துகிறார். கர்த்தர் ஆபிரகாமிடம் சொன்னார் “… நீ பார்க்கிற இந்தப் பூமி முழுவதையும் நான் உனக்கும் உன் சந்ததிக்கும் என்றைக்கும் இருக்கும்படி கொடு” (13:15).

ஆபிரகாம் இன்னொரு விசுவாச சிக்கலில் போராட்டம் தேவன் உற்சாகத்தை அருளுகின்றார். முற்பிதாவுக்கு வாக்குத்தத்த நாட்டைப்பற்றி மறுபடியும் கூறுகின்றார். லோத்து தெரிந்தெடுத்த யோர்தான் பள்ளத்தாக்கைத் தெரிந்துகொண்டது தேவன் ஆபிரகாமுக்கும் அவன் சந்ததிக்கும் வாக்குப்பண்ணின பூமிக்கு எந்த விதத்திலும் தடை அல்ல என உறுதிப்படுத்தினார். எதிர் காலத்தில் லோத்தின் சந்ததியான மோவாபியரும், அம்மோனியரும் உண்மையான கானானில் வாழப்போவதில்லை என்பதனை முற்பிதாவுக்கு தெரிவிக்க தேவை இல்லை என்பதையும் ஆண்டவர் கண்டார். அந்நாட்களில் அவர்கள் யோர்தானுக்கும் சவக்கடல் பகுதிக்கும் கிழக்காக வாழ்ந்தவர்கள். இந்த வேளையில் அவர் வாக்குப்பண்ணின பூமி இன்னும் அவனுக்காகவே இருக்கிற தென்றும் பலமுள்ளதும், அவன் தன் வாழ்நாளில் எதிர் கொள்ளுகிறவர்களுக்கு அவன் ஆசீர்வாதமாய் இருக்க ஆபிரகாம் தன்னை விசுவாசிக்க வேண்டுமென விரும்பினார். இந்த பூமியின் வாக்குத்தத்தம் புதுப்பிக்கப்பட்டதற்கு ஆபிரகாம் நன்றியுடன் மற்றுமொரு பலிபீடத்தைக் கட்டி தேவனை தொழுது

கொண்டான் (13:18).

---

இறுதிக் குறிப்புகள்

[1]John H. Walton, Victor H. Matthews, and Mark W. Chavalas, *The IVP Bible Background Commentary: Old Testament* (Downers Grove, Ill.: InterVarsity Press, 2000), 44–45. [2]"கானானியர்கள்" ("வணிகர்கள்") பட்டணங்களில் வாழ்ந்தனர், அதே சமயம் "பெரிசியர்கள்" ("கிராமத்தார்") கிராமங்களில் வாழ்ந்தனர். ஆகிலும் "பெரிசியர்கள்" ஒரு இனக் குழுக்கள் எனப் புரிந்து கொள்ளப்பட வேண்டுமா என்பது புரியவில்லை. [3]Gordon J. Wenham, *Genesis 1—15*, Word Biblical Commentary, vol. 1 (Waco, Tex.: Word Books, 1987), 297. [4]See maps 12 and 34 in Yohanan Aharoni and Michael Avi-Yonah, *The Macmillan Bible Atlas*, 3d ed. (New York: Macmillan Publishing Co., 1993), 19, 36. [5](NJPSV; NEB; REB; NAB; TEV; CEV) போன்ற பல மொழிபெயர்ப்பு "சொவோருக்குப் போகிற" என்ற பதம் முன்னதாகவே வருகின்றது, அப்பொழுது லோத்து தன் கண்களை ஏறெடுத்துப்பார்த்து. [6]காண்க Martin J. Mulder, "Sodom and Gomorrah," in *The Anchor Bible Dictionary*, ed. David Noel Freedman (New York: Doubleday, 1992) 6:101–2. [7]தேவனது பண்புக்கு "என்றென்றும்" அல்லது "நித்தியத்திறகும்" சார்ந்து *'olam* பொருள் படும் என்றாலும், "என்றென்றும்" என்று அர்த்தப்படாத சந்தர்ப்பங்களிலும் இந்த வார்த்தை பயன் படுத்தப்பட்டுள்ளது. காண்க *நடைமுறைப்படுத்துதல்: "நித்திய உடன்படிக்கை"* பக்கம் 105-110. [8]காண்க Bruce K. Waltke, *Genesis: A Commentary* (Grand Rapids, Mich.: Zondervan Publishers, 2001), 222–23. [9]எருசலேமுக்கு தெற்கே-தென்மேற்கே இருபது மைல் தொலைவில் எபிரோன் அமைந்துள்ளது.